**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**அசல் வழக்கு எண் – 57/2019**

**CNR NO: TNAL05000085-2019**

1.முத்தாச்சி, வயது 80, த/பெ. பஞ்சநாதன்,
2. சுந்தர்ராஜன், வயது 58, த/பெ. பஞ்சநாதன்,
3. வீரமணி, வயது 55, த/பெ. பஞ்சநாதன்,
4. கலியபெருமாள், வயது 50, த/பெ. பஞ்சநாதன்,
வாதிகள் அனைவரும், காலனி தெரு,
பெரியகருக்கை கிராமம், ஆண்டிமடம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம். – வாதிகள்

/எதிர்/

1. செல்வம், வயது 35, த/பெ. கணேசன்,கிழக்கு தெரு,
2. சக்கரவர்த்தி, வயது 55, த/பெ. மாணிக்கம், வடக்குதெரு,
3. வேணுகோபால், வயது 40, த/பெ. சாமிநாதன், கிழக்கு தெரு,
4. கணேசன், வயது 60, த/பெ. வேலாயுதம், மேலத்தெரு,
5. வேல்முருகன், வயது 40, த/பெ. கணேசன், தெற்கு தெரு,
பிரதிவாதிகள் அனைவரும், பெரியகருக்கை கிராமம்,
ஆண்டிமடம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம். – பிரதிவாதிகள்

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : | 25.02.2019 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 25.02.2019 |
| வியாஜ்ஜிய மூலம் | : | 14.02.2019 |
| வழக்கின் மொத்த பொறுமானம் | : | Rs.1000/- |
| செலுத்தவேண்டிய நீதிமன்ற கட்டணம் | : | Rs.750.50/- |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | : | Rs.76 /- |
| நீதிமன்ற கட்டணத்திற்கான சட்டப்பிரிவு | : | 27(c)TNCF Act |

தாவா சொத்தில் வாதிகளின் நிம்மதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ அல்லது அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ, எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யாமல் இருக்க வேண்டி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத் தொகை வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவும், மற்றும் இவ்வழக்கின் தன்மைக்கேற்ப சமூகம் கோரட்டாரவர்களுக்கு தம்யுக்தமாய்

கருதும் இதர நியாய பரிகாரங்கள் வழங்கி வாதிகளுக்கு சாதகமான தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்கிட வேண்டி பிரார்த்திக்கப்படுகிறது.

இவ்வழக்கானது 27.02.2024 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.S.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையாகியும்,2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், 4 ம் பிரதிவாதி தள்ளுபடி செய்யப்பட்டும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**<u>தீர்ப்பாணை</u>**

1) வாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

2) இறுதி வாய்தாவிலும் மற்றும் இந்த வாய்தாவிலும் விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்தது.

3) இந்நிலையில் வாதியின் வருகை அவசியமானது. வாதி தனது தரப்பு விசாரணையை துவங்க முன்வரவில்லை.

4) எனவே, நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2024–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ஆம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

**<u>சொத்து விபரம்</u>**

அரியலூர் ரி.டி., அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தாலுக்கா, ஆண்டிமடம் சார்பதிவகம், ஆத்துக்குறிச்சி மதுரா பெரியகருக்கை கிராமத்தில் நத்தம் மனைவரி பட்டா 929 நத்தம் சர்வே எண் 338/9 ல் 175 சதுரமீட்டருக்கு 0.4 ½ செண்டு மனை மற்றும் அதில் உள்ள கூரைவீடும். இதற்கு நான்கெல்லை ரோட்டிற்கு மேற்கு, காசிநாதன் வீடு, மனைக்கு வடக்கு, இராமநாதன் நிலத்திற்கு கிழக்கு, கலியன் காலி இடத்திற்கு தெற்கு, இதற்கு பழைய நத்தம் சர்வே எண் 338/14.

ஒப்பம்/–திரு.S.கணேஷ், M.Com., M.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.

---

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
அசல் வழக்கு எண்.57/2019
தீர்ப்பாணை
நாள்: 27.02.2024

---